**24 கால் மாறி ஆடிய**

அறுபத்து நான்கு கலைகளில் எம்பெருமான் ஆடும் திருநடனத்தை தானும் ஆடுவதுஉகந்ததல்ல என்ற எண்ணம் கொண்டு, அதனை நீங்கி மற்ற அறுபத்து மூன்று கலைகளைமட்டும் பயின்றான் ராஜசேகர பாண்டியன்.

ஒரு சமயம் கரிகால சோழனின் அரண்மனை புலவர், பாண்டியனது அவைக்கு வந்து, தன்னுடைய அரசன் அறுபத்து நான்கு கலைகளையும் கற்ற வரென்றும், பாண்டியன் கலைகள்முற்றும் அறிந்தவனல்ல என்று ஏளனமாக கூறினார்.

வெகுண்ட பாண்டியன் ஐயன் ஆடுகின்ற திருநடனத்தை தானும் ஆடிவதற்கு தன் மனம் இடம்தரவில்லை என்பதை எண்ணி, இருப்பினும் புலவரின் ஏளன ம் செய்ததால், ஐயன் ஆடும்ஆட்டத்தை தானும் ஆடுவது ஐய்யனின் திருவுள் ளம் போலும் என தெளிவுப் பெற்றான் .தக்க ஆசான் கொண்டு கசடர கற்று தேர்ந்தான்.

கூத்தினை பயிலும் போது பாண்டியனுக்கு அயர்வு ஏற்பட்டது. தன்னை போலவே எம்பெருமானுக்கும் அயர்வு ஏற்படாதா? என மிகவும் வருந்தி, பல நாட்களாக ஆடி வரும் ஐய்யனது திருவடிகளில் ஒன்றானது எவ்வளவு சோர்வினை அடைந்திருக்கும்? இவ்வாறு ஆடும் கூத்தினை எவ்வாறு நிறுத்துவது? நிறுத்தாவிடில் ஐய்யனது திருவடி வலிக்குமே என்று வருத்தத்தில் உழன்றான் பாண்டியன். இதற்கோர் முடிவு கட்ட எண்ணம் கொண்டான் மன்னன்.

சிவராத்திரி நன்னாளில் விஷேஷ பூஜைகளை முடித்து ஆடலை தரிசித்த பின், இரு கைகளையும் தலைக்கு மேல்கூப்பி, எம்பெருமானிடம், ஊன்றிய திருவடியை எடுத்து மேலே வீசி, தூக்கிய திருவடியை நிலத்தில் ஊன்றி, தான் காண, கால் மாற்றி ஆடி தனக்கு அருளவேண்டினான். அப்படிச் செய்யா விடில் தான் இறப்பது நிச்சயம் என்று கூறி வாளை எடுத்து தன்னை மாய்த்துக் கொள்ள துணிந்தான் பாண்டியன்.

உடனே சிவபெருமான் இடது காலை கீழே ஊன்றி, வலது காலை மேலே எடுத்து வீசி, கால் மாறி ஆடிக்காட்டி பாண்டிய மன்னனுக்கு அருளினார். இந்த திருகூத்தை யாவரும் தரிசிக்கும்படி எக்காலத்தும் இவ்வாறே நின்று அருள் செய்திட வேண்டும் என்று வேண்டினான் பாண்டியன். அன்று முதல் சோம சுந்தர கடவுள் கால் மாறி நின்ற கோலத்திலேயே நின்று அனைவரையும் காத்தருளுகின்றார்.

**பல்லவி**

பாண்டியன் சோழனைப் போல எல்லாக் கலைகளையும்
அறிந்தவனல்ல என சோழப் புலவன் சொல்ல

**அனுபல்லவி**

ஆண்டவன் ஆடும் பரதக் கலையதனை
அன்றே பயின்றிட ஆவலோடு ஆரம்பித்தான் பாண்டியன்

**சரணம்**

ஆட்டத்தில் அயர்வு கொண்டு அண்ணலை நினைத்து வருந்தி
கால் மாறியாடிடவே இறைஞ்சினான் பாண்டியன்
ஆட்டத்தின் அழகை அனைவரும் கண்டிட
அரசன் வேண்டவே அந்த கோலத்தில் நின்றாயே